


ஜமாலியன் டைம்ஸ்
Since 1951
Show Us The Right Path
தமிழ் மாத இதழ்
இதழ் 6 சுற்று 3 JAMALIAN TIMES மே, 2022




## தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றத்தின் சார்பில்

# இளம் விஞ்ஞானிகள் திட்டத்தின் பயிற்சி முகாம்

















திருச்சிராப்பள்ளி ஜமால் முகமது கல்லூரியில் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மன்றத்தின் சார்பில் இளம் விஞ்ஞானிகள் திட்டத்தின் பயிற்சி முகாம் நடைப்பெற்றது.

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் திருச்சி ஜமால் முகமது கல்லூரி ஆகியவை இணைந்து திருச்சி, கரூர் மாவட்டங்களை சேர்ந்த அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் மாணவ மாணவிகள் மற்றும் பிற மாணவர்களுக்கு அறிவியல் பாடப் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்பட்டது.

தொடக்க விழாவுக்கு கல்லூரி முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன் தலைமை வகித்தார். சுற்றுச்சூழல் அறிஞரும், தமிழக அரசின் மாநில திட்டக் குழு உறுப்பினருமான சுல்தான் அஹ்மத் இஸ்மாயில் சிறப்புரையாற்றினார். கல்லூரி செயலர் காஜா நஜிமுதீன், கல்லூரி பொருளாளர் ஜமால் முகமது ஆகியோர் வாழ்த்தினர். கணிதத் துறை தலைவர் ஜாஹிர் உசேன் வரவேற்றார்.

இந்த முகாமில் 80 மாணவ, மாணவிகள் கல்லூரி வளாகத்திலேயே உணவு விடுதி வசதியுடன் தங்கி பயிற்சி பெற்றனர். இதன் ஒரு பகுதியாக சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் அறிவியல் மையங்கள், ஆராய்ச்சி மையங்களுக்கு அவர்களை அழைத்துச் சென்று நேரில் பார்வையிடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மாணவர்களிடம் எந்த கட்டணமும் வசூலிக்கப்படாமல் அறிவியல் பாடப் பிரிவுகளில் ஆர்வத்தை ஊக்கப்படுத்த வேண்டும் என்பதற்க்காக இந்த பயிற்சி முகாம் நடத்தப்பட்டது.

மே 16 தொடங்கி மே 31 வரை பயிற்சி முகாம் நடைப்பெற்று முடிந்தன. 31ஆம் தேதி மாலை 3 மணிக்கு சாகித்திய அகாதமி விருது பெற்ற அறிவியல் எழுத்தாளர் ஆயிஷா நடராசன் சிறப்புரையாற்றி பேசினார்.

# தென்னிந்திய கபாடி போட்டியில் முதலிடம்




நமது கல்லூரி கபாடி அணி கோவை குமரகுரு கல்லூரி நிறுவனங்கள் நடத்திய தென்னிந்திய (South India Level) அளவிலான கபாடிப் போட்டியில் முதலிடம் பெற்றது. (இப்போட்டியில் 32 கல்லூரிகள் கலந்து கொண்டன)

# மாநில அளவிலான கையுந்து பந்து போட்டியில் இரண்டாமிடம்




நமது கல்லூரி வாலிபால் அணி மதுரை அமெரிக்கன் கல்லூரி நடத்திய மாநில அளவிலான கையுந்து பந்து போட்டியில் இரண்டாம் இடம் பெற்றது. வெற்றி பெற்ற வீரர்களை கல்லூரி நிர்வாகத்தினர் பாராட்டினர். (இப்போட்டியில் 16 கல்லூரி அணிகள் கலந்து கொண்டன)

ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
ஆற்றல் வளத் தனித்தகுதியும்
தேசியத் தர மதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் "A" தரச்சான்றும்
DBT- நட்சத்திரக் கல்லூரித் திட்டம் மற்றும் DST-FIST நிதிநல்கையும் பெற்றது
(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
திருச்சிராப்பள்ளி - 620 020


ஜனாப்.என்.எம்.காஜாமியான் இராவுத்தர்
கல்லூரி நிறுவனர்

முப்பெரும் விழா

நாள் : 26. 06. 2022, காலை 10. 00 மணி


ஹாஜி.எம்.ஜமால் முகமது சாஹிப்
கல்லூரி நிறுவனர்



கல்லூரி நிறுவனர் நாள் விழா,
கல்லூரி வரலாற்றைத் தொகுக்கும் பெருந்திட்டத் தொடக்கவிழா மற்றும்
"Global Jamalians Block" கட்டட அடிக்கல் நாட்டு விழாவிற்கு வருகை தந்து
விழாப் பேருரையாற்றவிருக்கும்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு. க. ஸ்டாலின்
அவர்களை
வருக! வருக!!
என அன்புடன் வரவேற்கிறோம்!!!.

திரு. கே. என். நேரு
மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர்
தமிழ்நாடு அரசு

முனைவர் க. பொன்முடி
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர்
தமிழ்நாடு அரசு

திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி
மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்
தமிழ்நாடு அரசு

பேரா. கே. எம். காதர் மொகிதீன் Ex.MP
தேசியத் தலைவர்
இந்திய யூனியன் முஸ்லிம் லீக்

சிறப்புரையாற்ற வருகை தரும் சிறப்பு அழைப்பாளர்களையும்
வருக! வருக!!
என அன்புடன் வரவேற்கிறோம்!!!.

அழைப்பின் மகிழ்வில் ...
நிர்வாகக்குழுவினர், கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள், பணியாளர்கள் & மாணவர்கள்

# மீலாதுந்நபி விழா












திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நபிகள் நாயகத்தின் பிறப்பைக் கொண்டாடும் மீலாதுந்நபி விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் Dr.A.K.காஜா நஜீமுதீன் D.Litt (USA), பொருளாளர் ஹாஜி M.J.ஜமால் முஹம்மது, உதவிச் செயலர் Dr.K.A.அப்துஸ் சமது மற்றும் நிர்வாக உறுப்பினர் & மதிப்புறு இயக்குநர் Dr.K.N.அப்துல் காதர் நிஹால் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் Dr.S.இஸ்மாயில் முகைதீன் தலைமை தாங்கினார்.

திருச்சி மாநகர ஜமா அத்துல் உலமா சபைத் தலைவர் மௌலானா மௌலவி ஹாஜி E.முஹம்மது ஷரீஃப் யூசுஃபி நிஜாமி அவர்கள் விழாப் பேருரை நிகழ்த்தினார். பதினான்கு நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் நபிகள் நாயகம் அவர்களை நாம் போற்றிக் கொண்டாடுவதற்கு அவர்களின் செல்வமோ அழகோ வலிமையோ காரணம் அல்ல, அவர்களின் நற்குணங்கள் நிரம்பிய ஆளுமையே காரணம் ஆகும். மனிதனுக்கு மனிதன் மரியாதை கொடுக்க வேண்டும் என்னும் பண்பாட்டினை நபிகள் நாயகத்திடம் நாம் காண்கிறோம்.

எந்தச் சமுதாயத்தின் தலைவர் உங்களிடம் வந்தாலும் அவருக்கு உரிய கண்ணியத்தை நீங்கள் கொடுங்கள் என்பது நபிகள் நாயகம் வலியுறுத்திய பண்பாகும். நபிகள் நாயகம் தன் அறுபத்துமூன்று ஆண்டுகால வாழ்க்கையில் ஒருபோதும் தவறான, அருவருப்பான, தீய சொல் பேசியதே இல்லை. யாருடைய உள்ளத்தையும் புண்படுத்தியது கிடையாது என்பதை நாம் உணர வேண்டும். நபியிடம் பணியாளராக இருந்த அனஸ் (ரலி) அவர்கள் இதற்குச் சான்று பகர்கின்றார். அதேபோல் நபிகள் நாயகம் தம் மனைவியரிடத்தில் மிகச் சிறந்த பண்புகளுடன் நல்ல கணவராகத் திகழ்ந்தார் என்பதற்கும் அவரது வாழ்வியல் சான்றாக இருக்கின்றது. எதிரிகளால் தாக்கப்பட்ட அல்லது பரிகாசம் செய்யப்பட்ட சில துயரமான தருணங்களில்கூட அவர்களைச் சபிக்கும்படி தோழர்கள் கேட்டபோது "நான் சபிப்பதற்காக அனுப்பபட்டவன் அல்ல, இறைவனால் கருணை காட்ட அனுப்பப்பட்டவன்" என்று நபிகள் நாயகம் சொன்னார்கள். 'முஸ்லிம் என்பவன் யாரென்றால் அவனது நாவாலும் கரத்தாலும் பிறருக்குத் துன்பம் ஏற்படக்கூடாது' என்று நபிகள் நாயகம் கூறியிருப்பதையும் வலியுறுத்தினார்.

இன்றைய காலத்தில் மாணவர்கள் போதைப் பழக்கத்துக்கு அடிமையாவது அதிகரித்து வருவது கவலை அளிக்கிறது என்றுசுட்டிக்காட்டியவர் மதுப் பழக்கத்துக்கு அடிமையாகிக் கிடந்த ஒரு சமுதாயத்தையே மதுவை முற்றிலும் புறக்கணித்த சமுதாயமாக மாற்றிக்காட்டிய புரட்சியாளர் நபிகள் நாயகம் என்னும் வரலாற்றை எடுத்துரைத்தார். மாணவர்கள் பணத்தை முதன்மையாகக் கருதாமல் குணத்தை முதன்மைப்படுத்தி வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

முன்னதாக, தீனிய்யாத் மற்றும் அறநெறிக் கல்வித் துறை சார்பில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் பங்கு பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இதில் முதல் பரிசு, இரண்டாம் ஆண்டு BCA., பயிலும் A. முகமது தாஹிர் என்ற மாணவருக்கும், இரண்டாம் பரிசு கும்பகோணம் நாச்சியார் கோவில், மதரசா மன்பவுல் ஹஸனத் அரபி கல்லூரி மாணவி A. அல்மாஸ் நஸீர்ன் என்ற மாணவிக்கும், மூன்றாம் ஆண்டு அரபி பயிலும் R. முஃமீனா என்ற மாணவி மூன்றாம் பரிசினையும், மயிலாடுதுறை A.V.C. கல்லூரியை சேர்ந்த எஸ். ஐஸ்வர்யா என்ற மாணவி ஆறுதல் பரிசினையும் வென்றனர். பேராசிரியர் Dr.M.P.செந்தில்குமார் வரவேற்புரை நிகழ்த்தித் தொடங்கிய விழா பேராசிரியர் Dr.M.ஷாஜஹான் சேட் நன்றியுரை நவில இனிதே நிறைவுற்றது. விழாவில் மேனாள் மற்றும் இந்நாள் பேராசிரியர்கள், கல்லூரி அலுவலகர்கள் மற்றும் மாணவர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## அரபு முதுகலை மற்றும் ஆய்வுத்துறை சார்பில்

# இரண்டு நாள் சர்வதேச கருத்தரங்கம்




திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி சார்பில் அரபு முதுகலை மற்றும் ஆய்வுத்துறை இரண்டு நாள் சர்வதேச கருத்தரங்கம் கல்லூரி வளாகத்தில் உள்ள அரங்கத்தில் 11 மற்றும் 12.5.2022 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது. இந்நிகழ்வில் முனைவர் ஏ.கே. ஹாஜா நஜ்முதீன், ஏமன் அல் ஹதீதா பல்கலைக்கழகம் பஸ்ஸாம் அஹமது அல் கௌஃபூரி அரபு எழுத்தாளர் மற்றும் நாடக கதாசிரியர் யாசர் பின் யஹியா அல் மத்துக்கலி, ஸ்ரீலங்கா முனைவர் பட்ட ஆய்வாளர் மீரான் மைதீன், எம்.ஐ. ஜமால் முகமது கோழிக்கோடு பல்கலைக்கழகம் பேராசிரியர் மற்றும் அரபுத்துறை தலைவர் ஏ.பி. மொய்தீன் குட்டி துணை முதல்வர் முகமது இப்ராஹிம் உள்ளிட்டோர்உரையாற்றினர். ஆறு அமர்வுகளாக நடைபெற்ற இக்கருத்தரங்கில் 50க்கும் மேற்பட்ட அரபுத்துறை சார்ந்த ஆய்வாளர்கள் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களின் ஆய்வு கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டது. கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர்களாக துணை பேராசிரியர்கள் அப்துர் ரஷீத், ஆயத் ஆகியோர் செயல்பட்டனர்.



Sastra Deemed University Thanjavur receiving the overall Trophy of EXOBIZ – 2022



JAMATICS 2022 - WINNER SHIELD TO LADY DOAK COLLEGE, MADURAI TEAM




State Level College Championship Match Winner Jamal Mohamed college




Overall Championship Winner Jamal Mohamed college



இளம் மாணவர்கள் விஞ்ஞானி திட்டம் (YSSP) நிறைவுவிழா – 2022

ஜமாலியன் டைம்ஸ்
தமிழ் மாத இதழ்

ஆசிரியர்
முனைவர். எஸ். இஸ்மாயில் முகைதீன்
M.Sc., M.Phil., PGDCA., Ph.D.,
கல்லூரி முதல்வர்

செய்தி ஆசிரியர்
முனைவர். D.I. ஜார்ஜ் அமலரெத்தினம்
M.C. A.,M.Phil.,P.G.D.B.A.,Ph.D.,
நிதியாளுநர் & இயக்குநர் (M.C.A)

இணை ஆசிரியர்கள்
K. சண்முக வேலாயுதம் M.A., M.Phil.,SET.,
R. ராஜேஷ்குமார் M.A., M.Phil.

ஆசிரியர் குழு
உதவிப் பேராசிரியர்கள், காட்சித் தொடர்பியல் துறை
B. ராமகிருஷ்ணன் M.F.A.,M.Phil.,
முனைவர் S. ரகுநாதன் M.A., PGDAPR., MA., Ph.D.,
D. பிரதீபன் M.Sc., SET.,
R. காமேஸ்வரன் M.Sc.,
மாணவர்கள், காட்சித் தொடர்பியல் துறை
S. ஸ்ரீநாத், A. முகமது அய்மன்

நிருபர்கள்
M. அப்துல் மஜீத், V. ராசிக் பரீது,
P. பிரபு மணிகண்டன், V. சிவகுமார்

ஒளிப்படக் கலைஞர்கள்
K. அரவிந்த் குமார், J. டென்சில் டொமினிக்,
B. ஹரிஷ் ஷர்மா, T.M. கரண், S. லெனின்

தொடர்புக்கு
காட்சித் தொடர்பியல் துறை
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி – 620 020

காட்சித் தொடர்பியல் துறையின் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக வெளியிடப்படும் ஜமாலியன் டைம்ஸ் மாத இதழ் தொடர்ந்து வெளிவர தங்களின் கருத்துக்கள், படைப்புகள், மற்றும் துறை செய்திகளை எங்களுக்கு அனுப்பவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
துறைத்தலைவர்
காட்சித் தொடர்பியல் துறை
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி – 620 020
jmcviscom@gmail.com

மாணவர்களின் பயிற்சிக்காக வெளியிடப்படும் இந்த இதழில் வரும் கருத்துக்கள் அனைத்தும் துறையின் கருத்தல்ல.

'ஜமாலியன் டைம்ஸ்' மாத இதழுக்கு தொடர்ந்து ஆதரவளித்து வரும் மக்கள் குரலுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

ஜமாலியன் டைம்ஸ் மாத இதழ் பப்ளிகேஷன்ஸ் சார்பாக அச்சிடுவோர்
மக்கள் குரல் நடுநிலை நாளேடு TRINITY MIRROR

**துறைத் தலைவர்கள் பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகளுக்கு ஒரு வேண்டுகோள்**

ஜமாலியன் டைம்ஸ் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது உங்கள் கருத்துக்களை தமிழில் எழுதி கடிதம் மூலமாகவோ அல்லது ஈமெயில் மூலமாகவோ அனுப்பலாம். அனுப்ப வேண்டிய முகவரி

ஆசிரியர்,
ஜமாலியன் டைம்ஸ்,
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சி – 620020
jmcviscom@gmail.com

# இலவச கண் பரிசோதனை முகாம்





திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் மாணவர்கள் ஆசிரியர்கள் ஆசிரியல்லாத பணியாளர்கள் என அனைவரும் இலவச கண் பரிசோதனை முகாம் அண்மையில் இரண்டு நாட்கள் நடைபெற்றன.

கல்லூரியில் இளம் அரிமா சங்கம் மற்றும் திருச்சி மகாத்மா காந்தி கண் மருத்துவமனை ஆகியவை இணைந்து நடத்திய முகாம் கல்லூரி செயலர் ஏ.கே. காஜா நஜூமுதீன் தொடங்கிவைத்தார். கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன் தலைமை வகித்தார்.

இரு நாட்களிலும் 1150 மாணவ, மாணவிகள் பங்கேற்று கண் தொடர்பான பல்வேறு பரிசோதனைகளைசெய்துகொண்டனர். முகாமில் ஒருங்கிணைப்பாளர் சேக் இஸ்மாயில், பேராசிரியர் மாணவ, மாணவிகள் பங்கேற்றனர்.

முகாமை அரிமா சங்க தலைவர் சு. முகமது சல்மான் அலி, செயலர் பிரகாஷ், பொருளாளர் பிரபாகரன் ஆகியோர் ஒருங்கிணைத்து நடத்தினர். இளம் அரிமா சங்க ஆலோசகர் கே. முகமது ரபி வரவேற்றார். மாணவர் சங்க துணைத்தலைவர் ராமமூர்த்தி நன்றி கூறினார்.

# மக்களுக்கான அரசின் நலத்திட்டங்கள்

## குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி



திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள பூனாம்பாளையத்தின் பஞ்சாயத்து தலைவர் திரு. வி. அரி கிருஷ்ணன் அவர்கள் பொது மக்கள், மாணவர்கள், இளைஞர்கள் ஆகியோருக்கு அரசின் மக்களுக்கான நலத்திட்டங்கள் குறித்து தெளிவாக எடுத்துரைத்தார்

திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் முதுகலை சமூகப்பணித்துறை மற்றும் தேவ கிருபை கார்னர்ஸ்டோன் குழந்தைகள் இல்ல சமூகப்பணி, முள்ளிப்பாடி மற்றும் மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் உன்னத் பாரத் அபியான் திட்டம் இணைந்து மே 26, 2022 அன்று அரசின் மக்களுக்கான நலத்திட்டங்கள் என்னும் விழிப்புணர்வு நிகழ்ச்சியை திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் உன்னத் பாரத் அபியான் திட்டத்தின் கல்லூரி விரிவாக்கப் பணிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமமான திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள பூனாம்பாளையம் சமுதாய கூடத்தில் நடைப்பெற்றது. இந்த நிகழ்விற்கு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள பூனாம்பாளையத்தின் பஞ்சாயத்து தலைவர் திரு. வி. அரி கிருஷ்ணன் அவர்கள் தலைமை தாங்கினார்.

இந்த நிகழ்வில் தேவ கிருபை சமூக சேவகர் மற்றும் ஆலோசகர் செல்வி.செ.அமல சோபியா அவர்கள் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு அப்பகுதியில் உள்ள பொது மக்கள், மாணவர்கள், இளைஞர்கள் ஆகியோருக்கு அரசின் மக்களுக்கான நலத்திட்டங்கள் குறித்து தெளிவாக எடுத்துரைத்தார். இந்த நிகழ்வின் மூலம் ஏறத்தாள முப்பதுக்கும் மேற்பட்ட பொது மக்கள், மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் வளர் இளம் பருவத்தினர் பயன்பெற்றனர். இந்த நிகழ்ச்சியினை திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் முதுகலை சமூகப்பணித்துறையின் உதவி பேராசிரியர் திரு. மு. ராஜலிங்கம் அவர்களின் ஆலோசனையோடு முதுகலை சமூகப்பணித்துறையின் முதலாமாண்டு மாணவர்.திரு. ப. அலெக்ஸ் ஜோயல் அவர்கள் இந்நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்தார்.

# சினிமாவின் வெற்றியை திரைக்கதையே தீர்மானிக்கும்

## திரைப்பட இயக்குனர் கஸ்தூரிராஜா



தமிழ் சினிமாவில் திரைக்கதையை வெற்றியைத் தீர்மானிக்கும் சக்தியாக விளங்குகிறது என்ற திரைப்பட இயக்குனர் கஸ்தூரிராஜா

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் இளநிலை விஷூவல் கம்யூனிகேஷன் துறை சார்பில் சினிமாவைப் புரிந்து கொள்ளுதல் என்னும் தலைப்பில் திங்கள்கிழமை நடைபெற்ற சிறப்பு சொற்பொழிவு நிகழ்ச்சியில் அவர் மேலும் பேசியது: சினிமா என்பது ஒரு மாயாஜால உலகம் அது ஒருவனை சிந்திக்க வைக்கும்; எழுத வைக்கும்; திறமை அழகாக மாற்றும்; தோல்வியை கற்றுத்தரும்; வெற்றியின் உச்சத்திற்கு கொண்டு செல்லும்; முகவரியையும் இழக்கச் செய்யும் ஒரு வெற்றியை தந்தால் மட்டும் மட்டுமே தொடர்ந்து நிலைத்து நிற்க முடியும் அதற்கு அனுபவமும், கற்றுக்கொள்ளும் ஆர்வமும் அதிகமாக இருத்தல் வேண்டும் கல்லூரி படிப்பு தொழில் நுட்ப படிப்பு முடித்தால் மட்டுமே இயக்குனர் என்ற நிலைக்கு வந்துவிடலாம் என கருதக் கூடாது.

இயக்குனர் செல்வராகவன் படித்தது மெக்கானிக்கல் இன்ஜினியரிங், ஆனால் அந்தத் துறையில் அவர் சாதிக்கவில்லை அவருக்கு ஆங்கில நாவல்கள் அதிகம் படிக்கும் பழக்கம் இருந்தது பல்வேறு மொழிப் படங்களையும் பார்த்து தானாகவே கற்றுக்கொண்டு சுயம்புவாக இயக்குனர். இயக்குனர் டி. ராஜேந்திரனும் அந்த வரிசையில் வந்தவர் தான். பிரம்மாண்ட இயக்குனர்களின் படங்கள் கூட பல நேரம் தோல்வியைத் தழுவியுள்ளன. அதற்கு திரைக்கதையில் கவனம் செலுத்தாமல் இருந்ததே காரணம். தோல்வியைத் தழுவும் என நினைக்கும் படம் பிரம்மாண்ட வெற்றியைப் பெறுவதும். வெற்றி பெறும் என நினைக்கும் திரைப்படம் தோல்வி அடைவதும் இயல்பு.

நான் இயக்கிய சோலையம்மா திரைப்படம் நல்ல வெற்றியை தரும் என நினைத்தேன் ஆனால் அது நடக்கவில்லை துள்ளுவதோ இளமை திரைப்படம் வெற்றியைத் தருமா என்ற கேள்வியை எழுப்பியது ஆனால் பிரம்மாண்ட வெற்றி கிடைத்தது. அந்த வெற்றிக்கு இசையமைப்பாளர் யுவன் சங்கர் ராஜாவும் முக்கிய பங்கு வகித்தார். திரைப்படத் துறையில் சாதிக்க வேண்டும் என நினைக்கும் இளைஞர்களுக்கு அனுபவம் அவசியம். 40 படங்களில் உதவி இயக்குனராக இருந்த பிறகு தனியாக படம் இயக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது அதுபோல இன்றைய இளைஞர்கள் களத்தின் எதார்த்தத்தை புரிந்து கொள்ள வேண்டும். தொடர்ந்து எழுதிப் பழக வேண்டும். நல்ல திரைக்கதைகளை படமாக்கினால் தான் மக்கள் கொண்டாடுவர் சின்ன பட்ஜெட் படங்களும் நட்சத்திர அந்தஸ்து இல்லாத புதுமுகங்கள் நடித்த திரைப்படங்கள் பெரும் வெற்றியைப் பெறுவது திரைக்கதையும் படமாக்கப்பட்ட விதமும் சிறப்பாக இருப்பதால்தான்.

கதாபாத்திரத்தின் உணர்வுகளை திரையில் பிரதிபலிக்கச் செய்ய வேண்டும், நல்ல அனுபவம் இல்லாமல் அது முடியாது. சினிமா சார்ந்த படிப்பு என்பது துணையாக இருக்கும் அதனுடன் அனுபவமும், தன்னம்பிக்கையும் திரைக்கதையில் வள்ளுவம் இருந்தால் அனைவருமே இயக்குனர்கள்தான். தமிழ் மொழி மாற்றப்படும் ஆங்கில சினிமாக்கள் பிரம்மாண்ட தொழில்நுட்பத்தால் வெற்றி பெறுகின்றன. தமிழ் சினிமாக்களுக்கு திரைக்கதையே முக்கியம் என்றார் அவர்.

நிகழ்வுக்கு கல்லூரி முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன் தலைமை வகித்தார். கல்லூரி பொருளாளர் எம்.ஜே. ஜமால் முகமது உதவி செயலர் கே. அப்துஸ் சமது ஆகியோர் வாழ்த்தினர். நிகழ்வில் விஷூவல் கம்யூனிகேஷன் பயிலும் மாணவர்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர் எம் எஸ் ஏ. துறை இயக்குனர் ஜார்ஜ் அமல ரத்தினம் வரவேற்றார். மாணவர் அகமது நன்றி கூறினார்

## ஜமால் முகமது கல்லூரியில்

# பதினாறு கவனகம் நிகழ்வு




திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் சோடா சாதனம் 16 கவனகம் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

கல்லூரியின் தமிழ்த் துறையும் திருச்சி திருக்குறள் பேரவையும் இணைந்து மீனாட்சி வைரவன் அறக்கட்டளையால் நடத்தப்பட்ட இந்த நிகழ்வுக்கு கல்லூரி முதல்வர் எஸ்.இஸ்மாயில் முகைதீன் தலைமை வகித்தார் திருக்குறள் திருமூலநாதன் அறக்கட்டளையின் நிறுவனர் பூவை.தயாபரன் நோக்க உரை ஆற்றினார்.

இதை தொடர்ந்து திருக்குறள் திருமூலநாதன் சோட சாவதானம் என்னும் பதினாறு கவனகரம் நிகழ்வுகளை செய்து காண்பித்தார். விழாவில் கி.ஆ.பெ.வி. கதிரேசன் புலவர் நாவை சிவம் ஆகியோரது தமிழ் பணியை பாராட்டி திருக்குறள் பேரரசன் விருது வழங்கப்பட்டது. மேலும் திருமூலநாதனின் 16 கவனகத்தை பாராட்டி அவருக்கு கவனக நன்மணி என்ற விருது வழங்கப்பட்டது. இந்த விழாவில் கல்லூரி பொருளாளர் எம். ஜே.ஜமால் முகமது, உதவி செயலாளர் அப்துஸ் சமது வாழ்த்துரை வழங்கினார்.

கல்லூரி தமிழ் துறை பேராசிரியர்கள் மாணவர்கள். திருச்சி திருக்குறள் பேரவையின் தலைவர் பு.வெ. தேவராசு.பொருளாளர் ராசேந்திரகுமார். தமிழ் ஆர்வலர்கள் விழாவில் பங்கேற்றனர்.

முன்னதாக தமிழ் ஆய்வுத் துறையின் தலைவரும் கலைப்புல முதன்மையருமான அ. சைய்யது ஜாகிர் ஹசன் வரவேற்றார் .நிறைவில் உதவிப் பேராசிரியர். க. சிராஜுதீன் நன்றியுரை கூறினார்.

## தமிழகத்தில் இஸ்லாமியர்களின் பங்களிப்புகளை

# வரலாற்றுப் பதிவு ஆக்கவேண்டும்







தமிழகத்தில் இஸ்லாமியர்களின் பங்களிப்புகளை வரலாற்றுப் பதிவாக வேண்டும் என்றார் அழகப்பா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் ராஜேந்திரன்

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் முதுகலை தமிழாய்வுத் துறை முதுகலை வரலாற்றுத் துறை இஸ்லாமிய தமிழ் பண்பாட்டு ஆய்வு மையம் ஆகியவை இணைந்து தமிழக முஸ்லிம்களின் வரலாறு பண்பாடு இலக்கியம் என்ற தலைப்பில் செவ்வாய்க்கிழமை நடத்திய பன்னாட்டு கருத்தரங்கை தொடங்கி வைத்து மேலும் அவர் பேசியது

எந்த ஒரு நாட்டுக்கும் சமூகத்துக்கும் வரலாறு என்பது முக்கியமானது வரலாற்று டிவியில் தான் உரை கல்லாக விளங்கும் சமுதாயத்துக்கு நினைவாற்றல் என்பது குறைவுதான் சூழலில் வரலாற்றுப் பதிவுகள் தான் அடுத்த தலைமுறைக்கு உண்மை செய்திகளை கொண்டு சேர்க்கும். தமிழகத்தில் இஸ்லாமியர்களின் பங்களிப்புகளை வரலாற்றுப் பதிவுகளாக வேண்டும் கல்வெட்டு ஓலைச்சுவடிகள் தொல்பொருள் ஆய்வுகளில் பல்வேறு ஆதாரங்கள் உள்ளன அவற்றை ஆய்வுக்குட்படுத்தி இஸ்லாமியர்களின் பங்களிப்பை ஆய்வுக்கட்டுரைகள் ஆகவும் நூல்களாகவும் வெளிக்கொணர வேண்டும்.

அறிவியலும் வரலாறும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. கேள்வி எழுவதால் கிடைப்பது வரலாறும் அறிவியலும் மட்டுமே இத்தகைய வழிமுறையில் தான் நமது கல்வியையும் வகுத்துள்ளோம் வணிகம் செய்வதற்கும், வர்த்தகத் தொடர்பு நடவடிக்கைகளுக்கும் இங்கு வந்த அரேபியர்கள் தான் இஸ்லாத்தைப் பரப்பினார்கள் குர்ஆனையும் முகமது நபிகளின் பொன்மொழியும் தவறாமல் பின்பற்றி பிறரையும் பின்பற்ற செய்துள்ளனர் தமிழகத்தில் இஸ்லாமியர்களின் பங்களிப்பு அளப்பரியது மாநிலத்தின் வளர்ச்சியுடன் இரண்டறக் கலந்துள்ள அவற்றை வெளிக்கொணர வேண்டும் என்றார் அவர்.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத் தமிழியல் துறை தலைவர் அலிபாபா பேசியது 1400 ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் இஸ்லாம் இருந்துள்ளது சங்க இலக்கியங்களில் இதற்கான குறிப்புகள் பல இடங்களில் எடுத்துக் காட்டுகிறது. தொல்காப்பியம் மணிமேகலையிலும் இதற்கான ஆதாரங்கள் உள்ளது கல்வெட்டுகள் பலவும் சான்றாக உள்ளன திருச்சி கல்லுப் பள்ளி உள்ளிட்ட பகுதிகளில் கிடைத்த கல்வெட்டுகள் இன்றளவும் இஸ்லாமியர்களின் பங்களிப்பு எடுத்துக்காட்டுகிறது அவன் ஒரு பத்துப்பாட்டு முதன்மை காஞ்சி நெடுநாள் வாடை என பல இலக்கியங்கள் இஸ்லாமியர்களை குறித்து குறிப்புக்கள் உள்ளன கல்வெட்டுகளாக கிடைத்த சில மட்டுமே செவிவழி செய்திகளாக கிடைத்தவை ஏராளம். அவற்றை எல்லாம் தொகுத்து ஆராய்ந்து அதிகளவில் நூல்களையும் கட்டுரைகளாகவும் வெளிக்கொணர வேண்டியதை வரலாறு மற்றும் தமிழாய்வுத் துறை பேராசிரியர்கள் மாணவர்கள் தங்களது கடமையாக ஏற்றுக் கொள்ள வேண்டுகிறாள் முன்னதாக கருத்தரங்க ஆய்வு சிறப்பிதழை முன்னாள் துணைவேந்தர் ராஜேந்திரன் வெளியிட்டார்.

இக்கருத்தரங்கு கல்லூரியின் முதல்வர் இஸ்மாயில் முகைதீன் தலைமை வகித்தார் முதுகலை தமிழாய்வுத் துறை தலைவரும் முதல்வருமான சையது ஜாகிர் உசேன் அவர்கள் வரவேற்றார் கல்லூரி செயலரும் தாளாளருமான காஜா நஜிமுதீன், உதவிச் செயலர் அப்துஸ்ஸமத் ஆகியோர் வாழ்த்தி பேசினர் இஸ்லாமிய தமிழ் பண்பாட்டு ஆய்வு மைய இயக்குனர் ஜெயம் ராஜா முகமது முதுகலை வரலாற்று ஆய்வு துறை தலைவர் அன்வர் உசேன் கருத்தரங்க அமைப்புச் செயலாளர்கள் முகமது இஸ்மாயில் குமர் சாதிக் செய்யது அகமது உள்ளிட்டோர் கருத்தரங்கத்தின் நோக்கம் மற்றும் எதிர்பார்ப்புகள் குறித்து விளக்கிப் பேசினர்.

இக்கருத்தரங்கில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த பேராசிரியர்கள் ஆய்வு மாணவர்கள் பங்கேற்று 54 ஆய்வு கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

## உணவக மேலாண்மை துறையின் பங்குகள் என்ற தலைப்பில்

# கருத்தரங்கம்




திருச்சி ஜமால் முகமது கல்லூரில் ஹோட்டல் மேனேஜ்மென்ட் அண்ட் கேட்டரிங் சயின்ஸ் துறையில், சுற்றலா துறையில் உணவக மேலாண்மை துறையின் பங்குகள் என்ற தலைப்பில், முனைவர் ஆர் நரசிம்மராஜ். உதவி பேராசிரியர் ,துறை தலைவர், கலைஞர் கருணாநிதி அரசு கலை கல்லூரி, புதுக்கோட்டை அவர்கள், சிறப்புரை ஆற்றினார்.

கல்லூரி செயலாளர் மற்றும் தாளாளர் ஏ.கே. காஜா நஜிமுதீன்,அவர்கள், முதல்வர் முனைவர் . இஸ்மாயில் மொஹைதீன் கலந்துகொண்டார், துணை பேராசிரியர் முனைவர் குணசீலன் வரவேற்புரை ஆற்றினார், ஒருங்கிணைப்பாளர் முனைவர் சாமுவேல் ஆனந்த் குமார் நன்றியுரை வழங்கினார்

## பெண்கள் பாதுகாப்பு மற்றும் வரதட்சணை இல்லாத சமூகம் என்ற தலைப்பில்

# கைக்கூலி கைவிட்டோர் கழகத்தின் சார்பில் கருத்தரங்கம்





முகமது கல்லூரியில் கருத்தரங்கம் திருச்சி மே 18 திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் கைக்கூலி கைவிட்டு கழகத்தின் சார்பில் கருத்தரங்கம் புதன்கிழமை நடைபெற்றது பெண்கள் பாதுகாப்பு மற்றும் வரதட்சணை இல்லாத சமூகம் என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் கல்லூரி முதல்வர் எஸ்.இஸ்மாயில் முகைதீன் தலைமை வகித்துப் பேசினார் சமூகத்தில் பெண்கள் பங்களிப்பு என்ற தலைப்பில் திண்டுக்கல் மாவட்ட முதன்மை நீதித்துறை நடுவர் மன்றம் எண் 1 நீதித்துறை நடுவர் வி. பிரியா பெண்களுக்கு எதிரான குற்றங்கள் என்ற தலைப்பில் திருச்சி காவல் உதவி ஆணையர்எஸ்.வனிதா, இன்றைய மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் என்ற தலைப்பில் கே.கே. நகர் காவல் உதவி ஆணையர் எல். பாஸ்கர் வரதட்சனை ஒளிப்பு மனிதகுல மேம்பாடு என்ற தலைப்பில் கல்லூரியின் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் பாரதி ஆகியோர் உரையாற்றினர் கருத்தரங்கில் கல்லூரி தாளாளர் மற்றும் செயலர் கே காஜா நஜிமுதீன் உதவி செயலாளர் அப்துல் சமது பகுதி–5 ஒருங்கிணைப்பாளர் சேக் இஸ்மாயில் ஆகியோரும் பேசினர் கழகத்தின் நிறுவனர் அப்துல் அலீம் மாணவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர் கழக ஆலோசகர் பேராசிரியர் எஸ். நாகூர்கனி வரவேற்றார் மாணவர் தலைவர் அகமது உசேன் நவ்ஃபல் நன்றி கூறினார்

## STUDENT CORNER

### SCIENCE AND TECHNOLOGY FOR SUSTAINABLE FUTURE

### POSTER COMPETITION FIRST PRIZE



**M. ABDUL MAJEED**

**III B.Sc. VISUAL COMMUNICATION**